கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24/2016**

அ.சா.**1**

பெயர்.திரு ஆறுமுகம்

சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் சாட்சி இன்று 15.07.2022 மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

<u>**3**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை _</u>

சம்பவ இடத்திற்கும், ஓட்டலுக்கும் இடையே 100 மீ தூரம் இருக்கும். கொலைசெய்யப்பட்ட நபரை நான் சம்பவத்திற்கு முன்பு நான் பார்த்ததில்லை. அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கூட்டுரோதை சேர்ந்தவர் என்று தெரிந்துகொண்டேன். எங்கள் ஓட்டலில் இறந்தவர் சம்பவத்திற்கு முந்தைய காலகட்டத்தில் உணவருந்தி உள்ளாரா என்றால் இல்லை. ஐய்யப்பன் என்ற பெயர் கொண்ட 2 எதிரிகளையும் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். சம்பவ நடக்கும்போது இரவு 10.30. நாங்கள் காவல் நிலையத்தில் ஒப்படைக்கும்போது இரவு 11.30 மணி. நான் திருக்கையில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். திருக்கையும், இறந்தவரின் ஊருக்கும் சுமார் 40 கி.மீ தூரம் இருக்கும். நான் ஓட்டலை 15 வருடமாக நடத்தி வருகிறேன். ஓட்டலில் பரோட்டா, தோசை மற்ற அயிட்டங்களும் உண்டு. ஓட்டலில் சாப்பிட வருபவர்களுக்கு நாங்கள் மது அருந்த அனுமதிப்பதில்லை. சம்பவ இடத்தில் இருந்து அலறல் குரல் கேட்டுதான் சம்பவ இடம் நோக்கி சென்றோம். எனது ஓட்டல் கடைக்கு பின்புறத்தில் பாத்திரங்கள் கழுவிகொண்டிருக்கும்போது அலறல் குரல் கேட்டு ஓடினோம். எனது கடைக்கு அருகில் வேறு கடைகளும், வீடுகளும் உள்ளன. அலறல் சத்தம் பக்கத்து கடை மற்றும் வீடுகளை சேர்ந்தவர்களுக்கும் கேட்டிருக்கும் என்றால் சரிதான். அவர்களும் ஓடிவந்தார்கள். சம்பவ இடத்தில் உணவு இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்ன உணவு இருந்தது என்றால் புரோட்டா இருந்தது. சரக்கு (மது) பாட்டில்கள் இருந்தது. என்ன பிராண்ட் மது என்று என்னால் சொல்லஇயலாது. மது பாட்டிலை என்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றால் பதற்றத்தில் அதை கவனிக்கவில்லை. புகாரில் சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றபோது அங்கிருந்து சிலர் வெவ்வேறு திசைகளில் ஓடினார்கள் என்று சொன்னேன் என்றால் சரிதான். எத்தனைபேர் அங்கிருந்து ஓடினார்கள் என்றால் 3 பேர் ஓடினார்கள். அதில் 2 பேரை விரட்டி பிடித்தோம். யார் யார் எந்தெந்த திசையில் ஓடினார்கள் என்றால் எனக்கு அந்த இடத்தில் திசை தெரியவில்லை. நான் படிக்கவில்லை. அ.சா.ஆ. 1 புகார் மனு நான்

கொடுத்ததுதான். புகார் நான் கைப்பட எழுதவில்லை. என்னுடன் வந்த பிரகாஷ் என்பவர் எழுதி கொடுத்தார். புகாரில் திசைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். எப்படி அவர்கள் ஓடினார்கள் என்று நான் சொல்வேன். ஒருபக்கம் 2 நபர்களும், மறுபக்கம் சிலர் ஓடினார்கள் என்று புகாரில் சொல்லியுள்ளோம் என்றால் சிலர் என்று சொல்லவில்லை. முதல்விசாரணையில் அன்பு என்ற ஒரு நபர் இருந்தார் என்றும், அவர் ஓடிவிட்டார் என்று சொன்னார்கள் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல. நாங்கள் இருநபர்களை பிடித்தோம். பிடிபட்ட நபர்கள் தங்களது பெயர் ஐய்யப்பன் என்று சொன்னார்கள். பிடிபட்ட ஐயப்பன் என்பவர் ஓடிபோய்விட்ட நபர் அன்பு என்று சொன்னார். 1, 2 எதிரிகளை நாங்கள் பிடித்ததாகவும் அவர்களிடம் கேட்டபோது அன்பு ஓடிவிட்டதாகவும் சொன்னார் என்றால் நாங்கள் 3 பேரை பார்த்தோம். ஒரு நபர் ஓடிவிட்டார். நாங்கள் பிடித்த 1, 2 எதிரிகளை நாங்கள் துன்புறுத்தி ஓடிப்போன நபர் பெயர் தெரிந்து கொண்டோம் என்றால் சரியல்ல. விசாரித்து தெரிந்து கொண்டோம். அன்பு என்பவரை முதன்முதலில் எங்கு பார்த்தேன் என்றால் நீதிமன்றத்தில்தான் தெரிந்துகொண்டேன். அவரை வேறு எங்கேயும் நான் பார்க்கவில்லை. 3ம் எதிரிக்கும் சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றும், உள்நோக்கத்தில் போலீசுக்கு அனுசரணையாக அவரையும் சேர்த்து சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டல் நடத்துவதால் போலீசுக்கும் அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24/2016**

அ.சா.**6**

பெயர்.திரு மணிகண்டன்

சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் சாட்சி இன்று 15.07.2022 மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**3**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை _

சம்பவம் நடைபெறும்போது நான் சிகரெட் வாங்குவதற்காக குபேந்திரன் கடைக்கு சென்றிருந்தேன். சம்பவ காலத்தில் நான் சென்ட்ரிங் வேலை பார்த்து வந்தேன். தற்போதும் சென்ட்ரிங் வேலை பார்த்து வருகிறேன். சம்பவம் நடக்கும்போது யார் யார் சென்றோம் என்றால் குபேந்திரன், ஆறுமுகம், சிவா, உமர்நாத், காத்தவராயன், முருகன், ஆகியோர் போனோம். சம்பவத்திற்கு முன்பு குபேந்திரனை எனக்கு தெரியும். குபேந்திரன் கடை வைத்துள்ளார். ஆறுமுகம் கடைக்கு பக்கத்தில் கடை வைத்துள்ளார். கத்தும் சத்தம் கேட்டு நாங்கள் சம்பவ இடம் போனோம். 3 பேர் இருந்தார்கள். அதில் 2 பேர் கிழக்குப்பக்கம் போனார்கள். 1 பக்கம் மேற்குபக்கமாக ஓடினார். 3ம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றும், அவரை நான் பார்க்கவில்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24/2016**

அ.சா.**5**

பெயர்.திரு பிரகாஷ்

சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் சாட்சி இன்று 15.07.2022 மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**3**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை _

அ.சா.1ன் ஓட்டலுக்கு அருகில் உள்ள கட்டிடத்தில்தான் எனது காரை நிறுத்துவேன். ஆம்னி காரை அன்று ஓட்டிவந்திருந்தேன். தற்போது நான் தமிழ்நாடு காவல் துறையில் விழுப்புரம் ஆயுதப்படையில் காவலராக இருக்கிறேன். சம்பவம் இடத்திற்கு ஏன் சென்றேன் என்றால் திடீரென சத்தம் கேட்டது. சத்தம் வந்த இடத்திற்கு அ.சா.1 ஆறுமுகம் ஓடினார். நானும் ஓடினேன். ஆறுமுகத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. அவரது ஓட்டலுக்கு போவேன். ஓட்டலுக்கு பின்புறம் நானும், சிவாவும், உமர்நாத், குபேந்திரன் ஆகியோர்கள் பாத்திரம் கழுவிகொண்டிருந்த ஆறுமுகத்துடன் இருந்தோம் என்று சொன்னேன் என்றால் சரிதான். பாத்திரம் கழுவும் இடம் ஓட்டலுக்கு பின்புறம் இருந்தது என்றால் சரிதான். சாப்பிட சென்ற நான் ஏன் ஓட்டலுக்கு பின்புறம் போனேன் என்றால் ஓட்டலில் யாரும் இல்லாததால் பின்புறம் போய் பார்த்தேன். 3ம் எதிரியை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. ஆளை பார்த்தேன். அவர் ஓடினார். 3ம் எதிரியை நான் நீதிமன்றத்தில்தான் முதன்முதலில் பார்த்தேன். எந்த தேதியில் பார்த்தேன் என்றால் வாய்தா தேதியில் பார்த்தேன். வருடம் சொல்லமுடியுமா என்றால் 2019ல் நான் பார்த்தேன். எதிரிகளை ஒப்படைக்கும்போது காவல் நிலையத்திற்கு நானும் சென்றேன். ஆறுமுகம், சிவா, மணிகண்டன், குபேந்திரன், உமர்நாத் ஆகியோருடன் நானும் காவல் நிலையம் சென்றேன். ஆறுமுகம் 2 எதிரிகளை அழைத்து கொண்டுபோக நான் இருசக்கரவாகனத்தில் பின்னால் சென்றேன். காவல் நிலையத்திற்கு சென்றதும் ஆறுமுகம் புகாரை எழுதிக்கொடுத்தாரா என்றால் நாங்கள் வந்தவர்களின் பெயர் விவரம், முகவரியை எழுதி கொடுத்தோம். ஆறுமுகம் புகார் கொடுக்க காவல் நிலையம் உள்ளே போனார். எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் போலீசாருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.